கூடுதல் சார்பு நீதிமன்றம், செய்யாறு, திருவண்ணாமலை மாவட்டம்.

முன்னிலை – திரு.எம்.விக்னேஷ் பிரபு, எம்.எல்.,

கூடுதல் சார்பு நீதிபதி, செய்யாறு.

2024 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள், 7ஆம் நாள் சனிக்கிழமை

I.A.No.1/2023 in O.S.No.270/2022

தேவகி, . . . மனுதாரர்/வாதி

/எதிராக/

1. சந்திரன்,

2. ரேணுகாம்பாள்,

3. ஆண்டாள்,

4. கோவிந்தன்,

5. ஆதிலட்சுமி,

6. சிவராமன்,

7. கோபாலகிருஷ்ணன்,

8. மனோகரன்,

9. பவுன்,

10. சார்பதிவாளர், தூசி,

11. மாவட்ட ஆட்சிர்,

திருவண்ணாமலை. . . .எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

12. தனபால் . . . 12ம் எதிர்மனுதாரர்/பிரதிவாதியாக

சேர்க்கவேண்டிய நபர்



M VIGNESH PRABHU

Digitally signed by M VIGNESH PRABHU
Date: 2024.12.07 17:08:34 +0530

இம்மனுவானது செய்யாறு சார்பு நீதிமன்றத்தில் கோப்புக்கு எடுக்கப்பட்டு விசாரணைக்காக நிலுவையில் இருந்து வந்தநிலையில் திருவண்ணாமலை முதன்மை மாவட்ட நீதிபதி உத்தரவிற்கிணங்க விடுவி.எண்.5664/2024 தேதி 30.10.2024 ன் கீழ் கூடுதல் சார்பு நீதிமன்றமான இந்நீதிமன்றத்திற்கு மாற்றம் செய்யப்பட்டு இந்நீதிமன்றத்தில் 02.12.2024 ஆம் தேதி இறுதியாக விசாரணைக்கு வந்த போது மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.B.சங்கரபாண்டியன் அவர்கள் முன்னிலையாகியும், 1, 8, 9 எதிர்மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.N.ஜானகிராமன் அவர்கள் முன்னிலையாகியும், 12ம் எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.S.ஆனந்தன் அவர்கள் முன்னிலையாகியும், 2 முதல் 7 மற்றும் 10, 11 ஆகிய எதிர்மனுதாரர்கள் ஒருதலைப்பட்சமாக்கப்பட்டும், இருதரப்பு வாதுரைகளை கேட்டும், சான்றாவணங்களைப் பரிசீலித்தும், இதுநாள் வரை இந்நீதிமன்றத்தின் பரிசீலனையிலிருந்து இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்,

## உத்தரவு

12ம் எதிர்மனுதாரர்/சேர்க்கப்படவேண்டிய நபரை பிரதான தாவாவில் பிரதிவாதியாக சேர்க்க தக்க உத்திரவு பிறப்பிக்க கோரி மனுதாரர்/வாதி தரப்பில் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

### 1. மனுவுடன் தாக்கல் செய்துள்ள மனு உறுதி கூற்றின் சுருக்கம்

மனுதாரர் 1 முதல் 9 பிரதிவாதிகள் தாவா சொத்துக்களில் தனக்கு உரிமையன 1/3 பாகத்தை பிரித்து கொடுக்க வேண்டுமென அவர்கள் மீது பாகப்பிரிவினை மற்றும் அவர்கள் ஏற்படுத்திக்கொடுத்தத பத்திரங்கள் செல்லாது என உத்தரவிட கோரி கனம் நீதிமன்றத்தில் தாவா தாக்கல் செய்துள்ளதாகவும், எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளிடம் தனக்கு உரிமையான 1/3 பாகத்தை பிரித்து



M VIGNESH PRABHU
Digitally signed by M VIGNESH PRABHU
Date: 2024.12.07 17:08:45 +0530

கொடுக்கவேண்டும் என்று கேட்டு அவர்கள் பிரித்து கொடுக்க முடியாது என்று கூறியதும், தான் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்கின்றேன் என கூறியதாகவும், இதை கேட்ட 1, 8, 9 ம் பிரதிவாதிகள் கூட்டாக சேர்ந்து தாவா சொத்தில் வில்லங்கம் ஏற்படுத்த வேண்டுமென 9ம் பிரதிவாதியை வைத்து அவரது உறவினரான ஒரு தனப்பால் என்பவருக்கு கிரையம் செய்துள்ளார் என்ற விவரம் அவர்கள் தரப்பில் தாக்கல் செய்துள்ள பதிலுரையின் மூலம் தெரியவந்தது என்றும், எனவே தாவா சொத்து இந்து கூட்டு குடும்ப சொத்து என்பதாலும் அதில் ஒரு பகுதியை கிரையம் பெற்றுள்ள காரணத்தினால் மேற்படி தனபால் என்பவரை இந்த வழக்கில் 12ம் எதிர்மனுதாரர்/சேர்க்கப்படவேண்டிய நபர் இந்த வழக்கில் அவசிய பார்ட்டியாக பிரதான தாவாவில் 12ம் பிரதிவாதியாக சேர்க்கப்பட்டு தாவாவை உரிய முறையில் திருத்தம் செய்து வழக்கை நடத்தினால்தான் தனக்கு உரிய நியாயம் கிடைக்கும் என்றும், இல்லையேல் தங்களுக்கு ஈடுசெய்ய முடியாத இழப்புகளும், கஷ்ட நஷ்டங்களும் உண்டாகும் என்றும், 12ம் எதிர்மனுதாரர்/சேர்க்கப்பட வேண்டிய நபரை பிரதான தாவாவில் 12ம் பிரதிவாதியாக சேர்க்க தக்க உத்தரவிட வேண்டுமென மனுதாரர் மனு உறுதிகூற்றில் கூறியுள்ளார்.

<u>2. 1ம் எதிர்மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டு 8, 9 எதிர்மனுதாரர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள எதிருரையின் சுருக்கம்</u>

மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனு நிலைக்கத்தக்கதல்ல. தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றும், மனுதாரர் கூறியுள்ள சங்கதிகள் யாவும் பொய்யும், மோசவிதமானது சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்றும், மனுதாரர் மற்றும் 1ம் எதிர்மனுதாரரின் தந்தையான நாகப்பன் உயிருடன் இருந்தபோதே குடும்ப பூர்விக சொத்துக்கள் மற்றும் அவரது பெயரில் வாங்கப்பட்ட சொத்துக்கள்



M VIGNESH PRABHU Digitally signed by M VIGNESH PRABHU Date: 2024.12.07 17:08:59 +0530

முழுவதும் குடும்ப ஏற்பாட்டின்படி பாகம் பிரித்து கொடுத்துவிட்டார் என்றும், குடும்ப ஏற்பாட்டில் அவரவர்களுக்கு கிடைக்கப்பெற்ற பாகத்தை அவரவர்கள் அனுபவித்து வந்தார்கள் என்றும், மனுதாரர், 1ம் எதிர்மனுதாரரின் தந்தை நாகப்பன் கடந்த 26.12.2001அன்று இறந்துவிட்டார் என்றும், 1ம் எதிர்மனுதாரர் மற்றும் 2 முதல் 7 எதிர்மனுதாரர்களின் தந்தையான குப்பன் என்பவரும் சேர்ந்து தங்களுக்குள் ஏற்பட்ட குடும்ப ஏற்பாட்டின்படி கிடைக்கப்பெற்ற சொத்துக்களை தூசி சார்பதிவாளர் அலுவலகத்தில் பாகப்பிரிவினை பத்திரமாக 27.06.2003 தேதியன்று பதிவு செய்து கொண்டார்கள் என்றும், பாகப்பிரிவினையில் 2 முதல் 7 எதிர்மனுதாரர்களின் தந்தை குப்பனுக்கு ஏ–ஷெட்டியூல் சொத்துக்களும், 1ம் எதிர்மனுதாரருக்கு பி–ஷெட்யூல் சொத்துக்களும் பாகமாக ஒதுக்கப்பட்டது என்றும், 1ம் எதிர்மனுதாரர் தனக்காகவும் மற்ற 8 மற்றும் 9 எதிர்மனுதாரர்களுக்காகவும் பதிலுரை தாக்கல் செய்தார் என்றும், அதன் பின்னிட்டு மனுதாரர் தாவாவில் உரிய திருத்தம் செய்ய வேண்டி மேற்பபடி இடைக்கால மனு எண்.1/2023 இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்தார் என்றும், மேற்படி மனுவில் 2 முதல் 7 எதிர்மனுதாரர்களின் தந்தையான குப்பன் என்பவருக்கு பாகப்பிரிவினையில் செல்லப்பெரும்புலிமேடு கிராம நஞ்சை சர்வே எண்.19/2சி – ல் 0.45 சென்ட்டும் மற்றும் ச.எண்.80/3 –ல் உள்ள கிணறு, 3 எச்.பி.மின்மோட்டார், மின்இணைப்பு எண்.101 ஆகியவைகளை சேர்க்காமல் விட்டுவிட்டு, மீண்டும் வேண்டுமென்றே தங்களுக்கு சாதகமான திருத்தங்களை மட்டும் மனுவில் குறிப்பிட்டுவிட்டு தாக்கல் செய்துள்ள இந்த மனு நிலைக்கத்தக்கதல்ல, தள்ளுபடி செய்யப்பட வேண்டிய ஒன்றாகும் என்றும், மனுதாரரின் மனுவை இவ்வெதிர்மனுதாரரின் செலவுத் தொகையுடன் சேர்த்து தள்ளுபடி செய்து தக்க உத்தரவிட வேண்டுமாய் தனது எதிர்உரையில் கூறியுள்ளார்.



M VIGNESH PRABHU
Digitally signed by M VIGNESH PRABHU
Date: 2024.12.07 17:09:11 +0530

**3. இம்மனுவில் தீர்வு காணப்பட வேண்டிய பிரச்சனையில் உள்ள சங்கதி என்னவென்றால், மனுதாரர் தாக்கல் செய்துள்ள இம்மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதே ஆகும்.**

**4. பிரச்சனைக்கான தீர்வு**

இரு தரப்பு வாதங்கள் கேட்கப்பட்டது. ஆவணங்கள் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டது. இருதரப்பில் சாட்சிகள் யாரும் விசாரிக்கப்படவில்லை, மனுதாரர் தரப்பில் 20.11.2022ம் தேதியிட்ட கிரையப்பத்திரத்தின் இணையவழி நகல் தாக்கல் செய்யப்பட்டு ம.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர்கள் தரப்பில் ஆவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை. மனுதாரர் அசல் வழக்கில் வாதியாவார். எதிர்மனுதாரர்கள் பிரதிவாதிகள் ஆவார்கள். அசல் வழக்கில் 12-ம் எதிர்மனுதாரரை 12ம் பிரதிவாதியாக சேர்த்து கொண்டு வழக்கினை மேல்நடத்த உத்தரவு பிறப்பிக்க வேண்டி இம்மனுவினை தாக்கல் செய்துள்ளார். அசல் வழக்கில் இம்மனுவில் எதிர்மனுதாரர்கள்/வாதிகள் பிரதிவாதிகளுக்கு எதிராக பாகப்ரிவினைக் கோரி அசல் வழக்கு தாக்கல் செய்து அந்த வழக்கு பிரதிவாதிகள் தரப்பில் எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்பட்டு எழுவினாக்கள் வனையப்பட்டு வாதிகள் தரப்பில் சாட்சிகள் விசாரணைக்காக நிலுவையில் இருந்து வந்த நிலையில் மனுதாரர் இம்மனுவினை தாக்கல் செய்துள்ளார். மனுதாரர் தன் மனுவிற்கு ஆதாரமாக 12ம் எதிர்மனுதாரர் பெயரில் ஏற்பட்ட கிரையப்பத்திரத்தினை ம.சா.ஆ.1 ஆக தாக்கல் செய்துள்ளார். எதிர்மனுதாரர்கள் தரப்பில் மனுதாரர் இம்மனுவை தாக்கல் செய்வதற்கு எவ்வித முகாந்திரமும் இல்லை என்றும், மனுதாரரின் மனுவை தள்ளுபடி செய்ய வேண்டுமென்று ஆட்சேபணை தெரிவிக்கப்பட்டுள்ளது. வாதி இவ்வழக்கினை தாக்கல் செய்ததற்கு பின்னிட்டு வழக்கு சொத்துக்களை பொருத்து ம.சா.ஆ.1



M VIGNESH PRABHU
Digitally signed by M VIGNESH PRABHU
Date: 2024.12.07 17:09:23 +0530

கிரையப்பத்திரமானது 12ம் எதிர்மனுதாரரான தனபால் என்பவரின் பெயரில் ஏற்பட்டுள்ளது என்பது மனு ஆவணங்களில் இருந்து தெரியவருகிறது.

5. மேலும், 12ம் எதிர்மனுதாரரை அசல் வழக்கில் தரப்பினாராக சேர்க்கும்பட்சத்தில் அவரது தரப்பு ஆட்சேபனை வெளிப்படும்பொருட்டும், மனுதாரர் மனுவில் கூறியுள்ள காரணம் ஏற்புடையதாக உள்ளதாலும், அசல் வழக்கில் பல்வேறு இடைக்கால மனுவினை தவிர்க்கும்பொருட்டும், மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனுவினை அனுமதிப்பதால் எதிர்மனுதாரர்களுக்கு எவ்வித இழப்பும் ஏற்படபோவதில்லை என்பதாலும், மனுதாரர் 12ம் எதிர்மனுதாரரை அசல் வழக்கில் 12-ம் பிரதிவாதியாக சேர்த்து அசல் வழக்கினை மேல்நடத்த வேண்டி தாக்கல் செய்துள்ள இம்மனுவானது நீதியின் நலன் கருதி அனுமதிக்கப்படுகிறது.

இறுதியாக மனுதாரர் தாக்கல் செய்துள்ள இம்மனுவானது செலவுத்தொகையின்றி அனுமதித்து உத்தரவிடப்படுகிறது.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைத்திருத்தம் செய்யப்பட்டு 2024 ஆண்டு டிசம்பர் திங்கள் 7ம் நாளாகிய இன்று என்னால் திறந்த இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்படுகிறது.

M VIGNESH PRABHU
Digitally signed by M VIGNESH PRABHU
Date: 2024.12.07 17:09:36 +0530

கூடுதல் சார்பு நீதிபதி,
செய்யாறு.

<u>மனுதாரர் தரப்பு சான்றாவணம்,</u>
9ம் பிரதிவாதி பவுன் என்பவர் தனபால் என்பவருக்கு

20.09.2022ம் தேதியில் ஏற்படுத்தி கொடுத்த கிரைய

பத்திரத்தின் சான்றிட்ட நகல் – Ex.P1

<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சியம் மற்றும் சான்றவணங்கள்</u>
இல்லை

M VIGNESH PRABHU Digitally signed by M VIGNESH PRABHU Date: 2024.12.07 17:09:46 +0530

கூடுதல் சார்பு நீதிபதி

செய்யாறு.